**பு.சா. 1 திரு. கோவிந்தசாமி த/பெ பெரியதம்பி வயது 47**

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார். _

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி – (எதிரி மனுவின் பெயரில் ஆஜரில்லை)**

2. பிராம்சாரி நோட்டில் பருத்தி மணி மற்றும் ராஜசேகர் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்தனர். அவர்கள் இருவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அதில் ஒருவர் என் நண்பர் என்றாலும் ஒருவர் என் உறவினர் என்றாலும் சரிதான். பிராம்சாரி நோட்டை யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதை எந்த தேதியில் எழுதினார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்த பணத்தில் ரூபாய் ஆறு லட்சம் என் நண்பரிடம் இருந்து பெற்றுக் கொடுத்தேன். அந்த விவரத்தை நான் புகாரில் தெரிவித்துள்ளேன். நான் கூறுவது போல் என் நண்பரிடம் இருந்து ரூபாய் 6 லட்சம் வாங்கி எதிரிக்கு கொடுத்ததாக புகாரில் நான் தெரிவிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல. மேற்படி விபரத்தை எனது சட்ட அறிவிப்பிலும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு கொடுத்த பணத்திற்கு நான் வருமான வரி செலுத்தி உள்ளேனா என்றால் நான் வெளிநாட்டில் வேலை செய்த போது சம்பாதித்த பணம் என்பதால் இங்கு நான் வருமான வரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. என் மனைவி பெயர் மாலதி ஆகும். மாலதி என்பவர் பெயருக்கு 14.02.2019 தேறியிட்ட 429/2019 ஆக பதிவு செய்யப்பட்ட ஒரு கிரயம் ஆவணம் மூலம் ஒரு சொத்தை வெங்கட்ராமன் என்பவர் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மாலதி பெயருக்கு கிரயம் கொடுக்கப்பட்ட சொத்தின் புல எண் 268/3c, 270/B4 என்றால் எனக்கு ஞயாபகமில்லை. அதற்கு முன்பு 20.12.2018 தேதியிட்ட ஒரு கிரைய உடன்படிக்கையை ரூ. 32 லட்சித்திற்கு நானும் வெங்கட்ராமன் என்பவரும் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். ஆனால் பேசப்பட்ட தொகை ரூபாய் 50 லட்சம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கடனை தீர்க்க வேண்டும் என்ற

காரணத்தை குறிப்பிட்டு தான் சொத்தை விற்பதாக கிரய உடன்படிக்கையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அந்தக் கிரய உடன்படிக்கையில் நான் பணம் கொடுத்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness                    Judicial Magistrate No.III (FAC)<br>Tirupathur. |